வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 26.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தேசிய கொடியை ஏற்றி வைத்து, முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

குடியரசு தினத்தையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

குடியரசு தினத்தையொட்டி இந்த ஆண்டுக்கான பத்ம விருதுகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

புதுச்சேரியில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், தேசிய கொடியை ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

---------------------------

*குடியரசு தினம்-டெல்லி 1 (12)*

நாட்டின் 76ஆவது குடியரசு தினம், நாடு முழுவதும் இன்று கோலாகலமாக கொண்டாடப் படுகிறது. புதுடெல்லி கடமைப் பாதையில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தேசிய கொடியை ஏற்றி வைத்து, முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இன்றைய

கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக இந்தோனேஷிய அதிபர் திரு. பிரபோவோ சுபியாண்டோ கலந்து கொண்டார். முன்னதாக, குடியரசு தினவிழாவிற்கு வருகை புரிந்த திருமதி திரௌபதி முர்மு, மற்றும் இந்தோனேஷிய அதிபரை, பிரதமர் திரு. நரேந்திர மோடி வரவேற்றார்.

நாட்டின் ராணுவ வலிமையை பறைசாற்றும் வகையில், முப்படைகளின் அணிவகுப்பு அமைந்தது. பீரங்கிகள், நவீன ரக ஏவுகணைகள் உள்ளிட்டவையும் அணிவகுப்பில் இடம்பெற்றன.

குடியரசு தினம்-டெல்லி 2 (17)

பின்னர், 54 நவீன போர் விமானங்களும், ஹெலிகாப்படர்களும் வான் மண்டலத்தை அலங்கரித்தன. பிரான்ஸ் விமானப் படையின் 3 போர் விமானங்கள், இந்தியப் படையின் 46 நவீன விமானங்கள், இந்திய கடற்படையின் ஒரு போர் விமானம், இந்திய ராணுவத்தின் 4 ஹெலிகாப்டர்கள் நடத்திய வான் சாசக நிகழ்ச்சிகள் பொது மக்களை பெரிதும் கவர்ந்தது. இந்த குடியரசு தினவிழாக் கொண்டாட்டங்களில், குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங், மற்றும், மத்திய அமைச்சர்கள், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

முன்னதாக இன்று காலை, டெல்லியில் உள்ள போர் நினைவுச் சின்னத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். குடியரசு தினத்தை தினத்தை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அரசியல்

சாசனத்தை உருவாக்க அரும்பாடுபட்டவர்களுக்கு தலை வணங்குவதாகவும், வலிமையான, வளமான இந்தியாவை உருவாக்கவும், அரசியல் சாசன அம்சங்களை பேணிக் காக்கவும், நாம் அனைவரும் உறுதியேற்போம் என்று அவர் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---------------------------

*எல். முருகன்-கொடி (4)*

கோவை மாவட்டம் காரமடைப் பகுதியில், தனியார் பள்ளியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தேசிய கொடியை ஏற்றி வைத்து, உறுதி மொழியை ஏற்றுக் கொண்டார்.

---------------------------

*புதுடெல்லி-ஆகாஷ்வாணி (7)*

குடியரசு தினத்தையொட்டி, புதுடெல்லி ஆகாஷ்வாணி பவன் வளாகத்தில், இயக்குநர் ஜெனரல், ப்ரக்ஞ்யா பலினால் கவுர், தேசிய கொடியை ஏற்றினார். அலுவலக வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

ஆகாஷ்வாணி - புதுச்சேரி வானொலி நிலைய வளாகத்தில், இன்று காலை நிகழ்ச்சிப் பிரிவு தலைவர் திரு. மயிலாடுதுறை த. செந்தில் குமார் தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். விழாவில் நிலைய ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

---------------------------

*வீர் கதா* (11) (*வாய்ஸ்) 51*

மத்திய பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் கல்வி அமைச்சகம் இணைந்து நடத்திய வீர் கதா 4.0 போட்டியில் வெற்றி பெற்ற 100 மாணவர்களுக்கு பரிசு வழங்கும் விழா, நேற்று புதுடெல்லியில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், ஆகியோர் கலந்து கொண்டு, வீர் கதா 4.0 – ன் சூப்பர் 100 வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்தினர்.

இப்போட்டியில் புதுச்சேரி விவேகானந்த அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர் முகமது தட்சுதீன், வள்ளலார் அரசுப் பள்ளி மாணவி குகானா, வஉசி அரசு மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவர் விஜய விவேஷ்குமார் ஆகியோர் வெற்றி பெற்றனர். இதுகுறித்து மாணவர் விஜய விவேஷ் எமது செய்தியாளரிடம் கூறுகையில்....

(வாய்ஸ்)

---------------------------

*குடியரசு தினம்-புதுச்சேரி 1 (12)*

புதுச்சேரி கடற்கரை சாலையில் இன்று காலை நடைபெற்ற குடியரசு தினவிழாவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், தேசிய கொடியை ஏற்றி வைத்து, காவல் துறையின் பல்வேறு படைப் பிரிவினர் மற்றும் என்சிசி மாணவர்கள் உள்ளிட்ட பள்ளி மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து பல்வேறு காவல் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனைப்

படைத்தவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை துணை நிலை ஆளுநர் வழங்கி சிறப்பித்தார். பின்னர் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெற்றது. விழாவில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலர், டிஜிபி உள்ளிட்ட அரசுத் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். தொடர்ந்து புதுச்சேரி சட்டசபை வளாகத்தில் முதலமைச்சர் திரு. ரங்கசாமி தேசிய கொடியை ஏற்றி வைத்து, சட்டப் பேரவைக் காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

*குடியரசு தினம்-புதுச்சேரி* 2 (4)

ஏனாம், ஜிஎம்சி பாலயோகி மைதானத்தில் நடைபெற்ற குடியரசு தினவிழா கொண்டாட்டங்களில், மண்டல நிர்வாகி திரு. ஆர். முனுசாமி, தேசிய கொடியை ஏற்றி, மரியாதை செலுத்தினார். தொடர்ந்து காவல் துறை அணிவகுப்பு மற்றும் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

---------------------------

*என்.எல்.சி – குடியரசு தினம் 1 (2)*

இன்று காலை நெய்வேலி என் எல்சி இந்தியா நிறுவனத்தில் நடைபெற்ற குடியரசு தின விழா பற்றிய ஒரு செய்தித் தொகுப்பு……

(வாய்ஸ்)

*என்.எல்.சி – குடியரசு தினம்* 2 (17)

(வாய்ஸ்)

என்எல்சி இந்தியா லிமிடெட் நிறுவனம் பாரதி விளையாட்டரங்கில் நடைபெற்ற குடியரசு தின விழாவில், நிறுவனத்தின் தலைவரும், மேலாண் இயக்குநருமான திரு. பிரசன்ன குமார் மோட்டுப் பள்ளி, மூவர்ண கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையை ஏற்று கொண்ட அவர், மூத்த தொழிலாளிகள், விளையாட்டு வீரர்-வீராங்கனைகளுக்கு, பரிசுகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சக்கர வண்டிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் அவர் தமது குடியரசு தின வாழ்த்துக்களை வழங்கி உரையாற்றுகையில், நமது நாட்டின் எரிசக்தித் துறையில் சிறந்த பங்களிப்பை வழங்கி வருவதன் மூலம், நாட்டிற்கு என்எல்சி நிறுவனம் முக்கிய பங்காற்றி வருகிறது என்று கூறினார். தற்போதைய மின் உற்பத்தித் திறன் 6 ஆயிரத்து 731 மெகா வாட்டாக உள்ளது என்று தெரிவித்த அவர், 2030ஆம் ஆண்டிற்குள், என்எல்சி நிறுவனத்தின் மொத்த மின் உற்பத்தித் திறனை 20 ஆயிரம் மெகாவாட்டிற்கும் அதிகமாக விரிவுப்படுத்தும் லட்சியத்துடன் செயல்பட்டு வருவதாகவும் கூறினார். பாதுகாப்பான மற்றும் நிலையான சுரங்க தொழில்நுட்பம் குறித்த 3ஆவது சர்வதேச மாநாட்டில், மதிப்புமிக்க சுரங்க, புத்தாக்க விருது உட்பட பல விருதுகளை என்எல்சி நிறவனம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

---------------------------

*பத்ம விருதுகள் (13)*

ஒவ்வொரு ஆண்டும், குடியரசு தினத்தன்று சமூக சேவை, அறிவியல் தொழில்நுட்பம், மருத்துவம், இலக்கியம், கல்வி உள்ளிட்ட பல துறைகளில்

சிறந்து விளங்குபவர்களுக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு 7 பத்ம விபூஷன், 19 பத்ம பூஷன், 113 பத்ம ஸ்ரீ விருதுகள் அறிவிக்கப் பட்டுள்ளன. இவர்களில் 23 பேர் பெண்கள். 10 பேர் வெளிநாடு மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர் பிரிவில் அடங்குவர். மேலும் 13 பேருக்கு மரணத்துக்கு பிந்தையதாக இந்த விருதுகள் அறிவிக்கப் பட்டுள்ளன. தமிழகத்தைச் சேர்ந்த நல்லி குப்புசாமி செட்டியார், நடிகர் அஜித் குமார், நடனக் கலைஞரும், நடிகையுமான ஷோபனா சந்திரசேகர் உள்ளிட்டோருக்கு பத்ம பூஷன் விருது அறிவிக்கப் பட்டுள்ளது. கிரிக்கெட் வீரர் அஷ்வின், சமையல் கலைஞர் தாமோதரன், மேலும் புதுச்சேரியை சேர்ந்த தவில் இசைக் கலைஞர் தட்சணாமூர்த்தி உள்ளிட்டோருக்கு பத்ம ஸ்ரீ விருதுகள் அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

மோடி இரங்கல் (8)

உலக புகழ்பெற்ற இருதய அறுவை சிகிச்சை நிபுணரும், பத்மஸ்ரீ விருது பெற்றவருமான டாக்டர் கே.எம் செரியன் காலமானார். அவருக்கு வயது 82. அன்னாரது மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். நமது நாட்டின் தலைசிறந்த மருத்துவர்களில் ஒருவரான டாக்டர் செரியனின் மறைவு, வேதனை அளிப்பதாக தெரிவித்துள்ளார். இதயவியல் மருத்துவத்தில் அவரது பங்களிப்பு, எப்போதும் நினைவு கூறப்படும் என்றும், எதிர்கால மருத்துவர்களுக்கு வழிகாட்ட உதவும் என்றும் அவர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---------------------------

*கால்பந்து* (3)

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், மும்பை அணி இன்று மேற்கு வங்க அணியை எதிர்கொள்கிறது. மும்பையில் நடைபெற உள்ள இப்போட்டி இன்று இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தேசிய கொடியை ஏற்றி வைத்து, முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

குடியரசு தினத்தையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

குடியரசு தினத்தையொட்டி இந்த ஆண்டுக்கான பத்ம விருதுகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

புதுச்சேரியில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், தேசிய கொடியை ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.